யைப் போட வேண்டாம் நிஷா. நாம வேற ரேஞ்சுல இருக் கோம்"

"ஜஸ்ட் ஒரு மணி நேரம் என்கூட ஸ்பெண்ட் பண்ணேன்.. எங்கேயாவது தனியா.. இருட்டுல அந்த முத்தத்தை மறக்கவே முடியலை"

"டியூட்டி ஃபர்ஸ்ட்.. குட் பை" என்று சொல்லி ஃபோனை அணைத்தான். "நிஷாவுக்கு நேரம் காலம் கிடையாது" என்று சலிப்புடன் நினைத்தான்.

அவன் பார்வை அங்கிருந்த விதவிதமான சினிமாக்காரர்களி டம் திரும்பியது.

"இது ஒரு தனி உலகம். இங்கேயும் கோடிகள் சர்வசாதார ணமாக விளையாடும். கையில் நிறைய பணம் வந்ததும் ஒரு சினிமா எடுத்தால் என்ன?"

ஆண்டனிக்கு சிரிப்பு வந்தது. "இவ்வளவு கஷ்டப்பட்டு சம்பா தித்து ஏன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ள வேண்டும்?"

லேசான சிரிப்புடன் யதேச்சையாக ரிசப்ஷனைப் பார்த்தவன், திடுக்கிட்டான். அங்கே இன்ஸ்பெக்டர் பால்ராஜ் ரிசப்ஷனில் இருந்தவனிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

ஆண்டனி அப்படியே ஒரு ஓரமாகப் பதுங்கினான். சினிமா ஆட்களுக்கு நடுவே கலந்தபடி கவனித்தான். பால்ராஜ் மெது வாக நடந்து பேஸ்மண்டுக்குக் கீழே இறங்கினார். ஆண்ட னிக்கு சிலீர் என்றது.

"மோப்பம் பிடித்துவிட்டானா? அல்லது வேறு ஏதாவது காரி யமாக வந்திருக்கிறானா? சான்ஸே இல்லை, என்னைப் பின் தொடர்ந்துதான் வந்திருக்கிறான். ஆண்டனி, எஸ்கேப்!"

"உள்ளே அறையில் லாப்டாப், பை முதலியவை இருக்கிறது. அதை அப்புறம் எடுத்துக் கொள்ளலாம். இப்போதைக்கு எஸ் கேப் ஆகி விடுவது நல்லது. பேஸ்மெண்ட்டுக்குச் செல்ல இன் னொரு வழி இடது பக்கம் இருக்கிறது. அங்கே போய் பால் ராஜ் என்னதான் செய்கிறான் என்று ஒரு பார்வை பார்க்க லாம்"

ஆண்டனி மெதுவாக இடது புறமாக இறங்கினான்.

"ஆண்டனி ஜாக்கிரதை.. அவன் துப்பாக்கி வைத்திருக்க வாய்ப்பு உண்டு"

ஆண்டனி சுவருக்குப் பின்னால் மெதுவாகப் பதுங்கி மெல்ல எட்டிப் பார்த்தான்.

பால்ராஜ் அவனுடைய அறைக்கு முன்னால் நின்று அதையே பார்ப்பதையும் பிறகு அதன் எதிர் திசையில் நடந்து ஓர் ஓர மாக இருந்த சோஃபாவில் அமர்ந்து கொண்டதையும் பார்த் தான். அவர் பார்வை அறையின் கதவு மீதே இருந்ததையும் கவ னித்தான்.

"பாஸ்டர்ட்! எப்படியோ பிடித்துவிட்டான். இனிமேல் இவனை விட்டு வைப்பதும் ஆபத்துதான்"

ஆண்டனி மறுபடி படியேறி மேலே வந்தான். ரிசப்ஷன் கண் ணில் படாமல் கூட்டத்துக்குள் வேகமாகப் புகுந்து நடந்து வெளியே வந்து பைக்கைக் கிளப்பினான். இரண்டு சாலைக ளைக் கடந்த பின் பைக்கை நிறுத்தி சங்கரனைத் தொடர்பு கொண்டான்.

"ஐயிரே, எங்கே இருக்க?"

"வீட்டுல பாஸ்"

"உன் வீட்டுக்குப் பக்கத்துல வர்றேன்.. நம்ப ஸ்டார் டீக்கடை இருக்கில்ல, அங்கே இன்னும் பத்து நிமிஷத்துல இருப்பேன்.. உடனே வா"

"சரி பாஸ், ஏதாவது பிரச்சினையா?"

"வாடா"

சங்கரன் டீக்கடையில் காத்திருந்தான். ஹெல்மெட் அணிந் திருந்த ஆண்டனி, அதை எடுக்காமல் ஹோட்டல் அறையின் சாவியை அவனிடம் கொடுத்தான். "ஐயிரே... நான் தங்கியி ருந்த ஹோட்டலுக்குப் போ. கொஞ்சம் கேர்ஃபுல்லா நடந் துக்க.. அந்த இன்ஸ்பெக்டர் பால்ராஜ் அங்கே என் ரூம் லாபி யில் இருக்கிறான். ப்ளூ ஷர்ட், பிளாக் பாண்ட் போட்டிருப் பான்.. பெரிய மீசை இருக்கும். தலையில் ஒயிட் கேப் போட் டிருப்பான்"

"அய்யய்யோ அவன் ஏன் அங்கே வந்தான்?"

"எப்படியோ மோப்பம் பிடிச்சிருப்பான்.. பட் நாம செஞ்சிக் கிட்டிருக்கிறதெல்லாம் அவனுக்குத் தெரிய வாய்ப்பில்லை. அன்னைக்கு பீச்ல நிஷாகூட நடந்த பிரச்சினைக்காகத்தான் ஃ பாலோ பண்ணியிருக்கான்."

"நான் என்ன செய்யணும் பாஸ்?"

"அவனை மறைஞ்சு நின்னு கவனி.. ரொம்ப நேரம் அவனால அங்கே வெயிட் பண்ண முடியாது. அவன் வெளியே போன சமயம் பார்த்து என் ரூமுக்குப் போயி என் பேக், லாப்டாப் ரெண்டையும் எடுத்துக்கிட்டு கதவை சாத்தி சாவியை அது லேயே தொங்க விட்டுட்டு கிளம்பிடு.."

"பயமா இருக்கு பாஸ்"

"சிம்பிள் மேட்டர்டா.. பயப்படாதே"

சங்கரன் சாவியை வாங்கிக் கொண்டு ஆட்டோவில் புறப்பட் டான்.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் லாபியிலேயே அமர்ந்து கொண்டு அறையைப் பார்த்துக் கொண்டே இருந்தார்.

"உள்ளே தான் இருக்கிறானா? ரிசப்ஷனில் சொன்னார்களே? உள்ளேதான் இருக்க வேண்டும். அவனை இப்போது பிடிப் பது முக்கியமில்லை. ஃபாலோ செய்ய வேண்டும். அவனு டைய தகிடுதத்தங்களைக் கண்டு பிடிக்க வேண்டும்"

காத்திருந்தார். காத்திருந்தார்.. கதவு திறக்கவே இல்லை.

"ஒரு காபியாவது குடித்துவிட்டு வருவோம். ரிசப்ஷனைத் தாண்டி எங்கே போய் விடப்போகிறான்?"

சற்று அலுப்புடன் படியேறி மேலே வந்தார். காபி ஷாப் சென்று காபி ஆர்டர் பண்ணிக் குடித்தார். சினிமா பிரஸ்மீட் டில் தென்பட்ட லேட்டஸ்ட் ஹீரோயினைப் பார்த்து ஜொள் விட்டார். அதற்குள் பதினைந்து நிமிடங்கள் கடந்து விட்டி ருந்தது. பால்ராஜ் மீண்டும் பேஸ்மெண்ட் வந்து ஆண்டனி யின் அறையைப் பார்த்து திடுக்கிட்டார். அதன் கதவில் சாவி தொங்கிக் கொண்டிருந்தது. உடனே அந்தக் கதவைத் திறந் தார். அறை துப்புறவாகக் காலியாக இருந்தது.

"தப்பித்துவிட்டான். சட்... விட்டுவிட்டோம்!"

அன்றிரவு ஒரு மணிக்கு நால்வரும் சற்குணத்தின் வீட்டின் பின்புறம் வழியாக நுழைந்தார்கள். ஆண்டனி தன் பையில் இருந்த துப்பாக்கியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். செக்யூரிட்டி வழக்கம்போல் கொசுவர்த்தியை ஏற்றி விட்டு தூங்குவதற்கான ஆயத்தங்களில் இருந்தான். வழக்கம்போல ஜன்னல் சட்டகத்தை அலுங்காமல் எடுத்துவிட்டு நால்வரும் உள்ளே நுழைந்தார்கள். உள்ளே கோடிக்கணக்கான பண மும், நகைகளும் அவர்களுக்காகக் காத்திருந்தன.

(தொடரும்)